### திரையுலகில் தொடர் வெற்றிகளைக் குவித்து வரும்

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்திற்கு பிறந்த நாள் நல்வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, டிச. 14-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'சூப்பர்ஸ்டார்' ரஜினிகாந்த் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**எல்லைகள் கடந்து 'ஆறிலிருந்து அறுபதுவரை' அனைவரையும் தன்னுடைய நடிப்பால், ஸ்டைலால் ரசிகர்களாக்கிக்**



**கொண்ட அருமை நண்பர் 'சூப்பர்ஸ்டார்' ரஜினிகாந்த் அவர்களுக்கு என் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!**

**திரையுலகில் தொடர் வெற்றிகளைக் குவித்து வரும் தாங்கள், எப்போதும் அமைதியோடும் மனமகிழ்ச்சியோடும் திகழ்ந்து மக்களை மகிழ்வித்திட வேண்டுமென விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# தமிழ்நாடு உங்களை எண்ணிப் பெருமை கொள்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - உலக செஸ் சாம்பியனாக வெற்றி வாகை சூடிய குகேஷ்க்கு பாராட்டு!

சென்னை, டிச. 14-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டின் குகேஷ்க்கு பாராட்டு தெரிவித்துள்ளார். அதில் "தமிழ்நாடு உங்களை எண்ணி பெருமை கொள்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக செஸ் சாம்பியனாக வாகைசூடி மிக இளம் வயதில் இப்பட்டத்தை வென்றிருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த குகேஷ் அவர்களை பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:



**பதினெட்டே வயதில் உலக செஸ் சாம்பியனாக வாகை சூடி மிக இளம் வயதில் இப்பட்டத்தை வென்றிருக்கும் குகேஷ் அவர்களுக்குப் பாராட்டுகள்!**

**தங்களதுஇந்தச்சிறப்புமிகு சாதனை செஸ் விளையாட்டில் இந்தியாவின் வளமான மரபின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது. மேலும், மற்றுமொரு உலக சாம்பியனை உருவாக்கி, செஸ் தலைநகரம் என்ற சிறப்பிடத்தை உலக அளவில் சென்னை தக்கவைத்துக் கொள்ளவும் அது துணை புரிந்துள்ளது.**

**தமிழ்நாடு உங்களை எண்ணிப் பெருமைகொள்கிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### முன்னாள் பாதுகாப்புப் படையினருக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்த

# சன் டிவி ரூ.3.50 கோடி கொடிநாள் நிதி!

சென்னை, டிச.14:

முன்னாள் பாதுகாப்பு படையினருக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக கொடி நாள் நிதியாக மூன்று கோடியே 50 லட்சம் ரூபாயை சன் டிவி குழுமம் வழங்கியுள்ளது.

ராணுவ வீரர்களின் தியாகத்தையும், பணிகளையும் போற்றும் வகையில், டிசம்பர் 7ம் தேதி நாடு முழுவதும் ஆயுதப் படை கொடிநாளாக கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி, ராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக கொடி நாள் நிதி வசூலிக்கப் படுகிறது. நாடுமுழுவதும் உள்ள லட்சக்கணக்கான முன்னாள் படை வீரர்கள், படை வீரர்களின் குடும்பத்தினர் இந்த நிதியின் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

அந்த வகையில், சன் டிவி குழுமம் கொடி நாள் நிதியாக மூன்று கோடியே 50 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. இதற்கான காசோலையை கேந்திரிய சைனிக் வாரியத்தின் இயக்குநர் கேப்டன் சதீஷ்குமாரிடம் சன் டிவி சார்பில், மல்லிகா மாறன், காவேரி கலாநிதி



மாறன் ஆகியோர் வழங்கினர். இந்திய பாதுகாப்பு படையின் ஓய்வுபெற்ற ராணுவ வீரர்கள் நலனுக்காக இந்த நிதி பயன்படுத்தப்பட இருப்பதாக கேந்திரிய சைனிக் வாரியத்தின் இயக்குநர் கேப்டன் சதீஷ்குமார் தெரிவித்தார்.

"சன் டிவி குழுமத்திடம் ஆயுதப்படை கொடி நாள் நிதியாக ரூ.3.50 கோடி பெறுவதில் மிக்க மகிழ்ச்சி. பெறப்படும் ஒவ்வொரு ரூபாயும் முன்னாள் படை வீரர்கள், உடல் உறுப்புகளை இழந்த வீரர்கள், சிகிச்சையில் உள்ள வீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்திருப்பவர்களின் குடும்ப நலனுக்காகவும், மறுவாழ்வுக்காகவும் பயன்படுத்தப் படுகிறது. சன் டிவி குழுமம் தொடர்ச்சி யாக கொடி நாள் நிதி வழங்கி வருவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆயுதப்படை கொடி நாள் நிதிக்கு அதிக பங்களிப்பு வழங்கும் நிறுவனமாக சன் டிவி குழுமம் உள்ளது" என கேப்டன் சதீஷ் குமார் தெரிவித்தார்.

முன்னாள் படைவீரர்கள் நலனுக்காக ஒன்றிய பாதுகாப்புத் துறை யின் கீழ் இயங்கும் கேந்திரிய சைனிக் வாரியத்துக்கு கடந்த 5 ஆண்டுகளில் 15 கோடியே 75 லட்ச ரூபாய் நிதியை சன் டிவி குழுமம் அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### கனமழை: முதலமைச்சரின் தீவிர நடவடிக்கைகளால்

# மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள்!

## எடப்பாடிக்கு - அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!

சென்னை, டிச. 14-

எவ்வளவு கனமழை வந்தாலும் அதனை எதிர்கொண்டு களத்தில் நின்று மக்களைக் காக்க முதலமைச்சர் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள் என்று எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் ரகுபதி பதிலடி கொடுத்துள்ளார்.

சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், தமிழ்நாட்டின் பல இடங்களில் கன மழை பெய்து வருவதையொட்டி, முதலமைச்சர் உத்தரவின் பேரில்



மிகசிறப்பான முன்னேற்பாடுகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். கடந்தகால அதிமுக ஆட்சியினைப் போல் அல்லாமல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அணைகளும் 24மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அணையின் நீர்திறப்பு பற்றி கரையோர மக்களுக்கு அவ்வப்போது உடனுக்குடன் நேரடியாக எச்சரிக்கைகள் இதற்கும் முன்பும் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன அதேபோல காலை முதலே அணையின் திறப்பு பற்றி எச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார். செம்பரம்பாக்கம் ஏரியினை எந்த வித முன்னெச்சரிக்கையும் இன்றி நடு இரவில் திறந்து அதனால் ஏற்பட்ட பெரும் உயிர் சேதம் போன்ற ஒரு கொடிய நிகழ்வை நடக்க இந்த திராவிட மாடல் ஆட்சி விடாது என்றும், ஆகவே எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி கவலை கொள்ள வேண்டியதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வளவு கன மழை வந்தாலும் அதனை எதிர்கொண்டு களத்தில் நின்று மக்களைக் காக்க முதலமைச்சர் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள் என்றும் எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி கொடுத்துள்ளார்.

### செஸ் சாம்பியன் டி.குகேஷ் வெற்றியால் நாட்டிற்குப் பெருமை!

# தமிழ்நாட்டையும் உலக அளவில் கொண்டு சேர்த்த வெற்றி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, டிச. 14-

உலக செஸ் சாம்பியனாக டி.குகேஷ் பெற்ற வெற்றியால் நாட்டிற்குப் பெருமை என்பதோடு, உலக அளவில் தமிழ்நாட்டையும் கொண்டு சேர்த்துள்ளது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

உலக செஸ் சாம்பியனாக வெற்றிபெற்ற தமிழ்நாட்டின்செஸ் விளையாட்டு வீரர் டி.குகேஷ் அவர்களை பாராட்டி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சமூகவலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் 2024 போட்



டியில் சாம்பியன் பட்டம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் கிராண்ட்மாஸ்டர் டி.குகேஷ்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் 'எலைட்'பிளேயர்ஸ் திட்ட வீரரான குகேஷ், சர்வதேச சதுரங்கப் போட்டிகளில் தொடர்ந்து வெற்றிகளை ஈட்டி வருவதில் பெருமிதம் கொள்கிறோம்.

அவரது வெற்றி நம் நாட்டிற்கு பெருமை சேர்ப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டையும் உலக அளவில் கொண்டு சேர்த்துள்ளது.

இளம் வயதிலேயே இந்த அசாதரண திறமை பலருக்கும் உத்வேகம் அளிக்கிறது. நம் சாம்பியன் தம்பி குகேஷ் இன்னும் பல சாதனைகளை படைத்து மென்மேலும் பிரகாசிக்க வாழ்த்துகள்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

### ஆலங்குடி வட்டம் - மாஞ்சன் விடுதி கிராமத்தில்

# 188 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் தலைமையில் நிகழ்ச்சி!

புதுக்கோட்டை,டிச. 14-

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், மாஞ்சன்விடுதி வருவாய் கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 11.12.2024 அன்று 188 பயனாளிகளுக்கு ரூ.3,14,835 மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பேசியதாவது; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் நோக்கத்தில் மாதந்தோறும் ஒரு குக்கிராமத்தை தேர்வு செய்து, மக்கள் தொடர்பு முகாம் நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், மாஞ்சன்விடுதி வருவாய் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டது.

இம்முகாமில், தமிழ்நாடு அரசு பல்வேறு அரசுத் துறைகளின் வாயிலாக மேற்கொள்ளப்படும் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்தும், அத்திட்டங்கள் மூலம் பயன்பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் தொடர்புடைய அலுவலர்களால் பொது மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் இம்முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பொதுசுகாதாரத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண்மைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாடு இக்கண்காட்சி மூலம் பொதுமக்கள் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மற்றும் சாதனைகளை அறிந்து கொண்டு பயனடையலாம்.

மேலும், இம்முகாமில் பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் தீர்வு காணப்படும். அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் பயன்பெறுவதற்கு பொதுமக்கள் அனைவரும் கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம். இம் மனுக்களின் மீது துறை சார்ந்த அலுவலர்களால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை உறுதி செய்யும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தில் கண்காணிப்பு அலுவலர் நியமிக்கப்பட்டு, பொதுமக்களின் கோரிக்கை மனுவின் நிலை குறித்து அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

எனவே பொதுமக்கள் அனைவரும் இதுபோன்று நடைபெறும் முகாம்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பேசினார்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அ.ஷோபா, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, ஆலங்குடி வட்டாட்சியர் பெரியநாயகி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் உஷா செல்வம், ஊராட்சிமன்றத் தலைவர் வே.சுரேஷ் கண்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் நகராட்சி முன் களப்பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் என 400க்கும் மேற்பட்ட அவர்களுக்கு நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு ஏற்பாட்டில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி நிவாரணப் பொருட்களை வழங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, துணைத் தலைவர் சித்திக் அலி, நகர நிர்வாகிகள் என்.என்.இளங்கோ, நந்தா நெடுஞ்செழியன், புருஷோத்தமன், நகர மன்ற உறுப்பினர்கள் அன்சர் அலி, வெற்றி, கோமதி பாஸ்கர், பத்மநாபன், பி.கே.சங்கர், மாவட்ட அணி நிர்வாகிகள் தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ்பாபு, மாணவர் அணி ீரீ வினோத், வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, அமைப்புசாரா ஓட்டுநர் அணி இளையராஜா, விவசாய சந்தோஷ், பூபாலன் உள்ளிட்ட வார்டு நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### செஞ்சி ஒன்றியத்தில் புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

# பொதுமக்களுக்கு அரசு நிவாரண உதவிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார் !

செஞ்சி, டிச 14-

விழுப்புரம் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த குடும்பங்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதையடுத்து செஞ்சி சட்டமன்ற தொகுதிசெஞ்சி ஒன்றியத்தில் தமிழக அரசின் 2000 ரூபாய் அரிசி, சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சிசெஞ்சி ஒன்றியம் கோனை,ஆலம் பூண்டி, சத்தியமங்கலம், செம்மேடு, அங்கராயநல்லூர் ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புயல் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பஅட்டைதாரர்களுக்கு 2000 ரூபாய்,அரிசி சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட அரசு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,கூட்டுறவு சார்பதிவாளர் ஜான் கென்னடி, கூட்டுறவு சங்க செயலாளர்கள் கோனை பழனி குமார், ஆலம்பூண்டி விநாயக மூர்த்தி,சத்தியமங்கலம் முருகன்,ஒன்றிய கவுன்சிலர்கள் கேமல், டிலைட்,ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம், மாவட்ட பிரதிநிதிகள் அய்யாதுரை, பஞ்சாட்சரம், ஊராட்சி மன்ற தலைவர்கள்அபர்ணா ரவிசங்கர், முத்தம்மாள் சேகர்,பிருந்தா சக்தி முருகன், பிலால், நிர்வாகிகள்ரேவதி கணேசன், பழனி தினகரன், லூர்துசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலம் ஊராட்சியில் புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அரசுநிவாரண உதவிகளை வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், கூட்டுறவு சார்பதிவாளர் ஜான் கென்னடி, ஊராட்சி மன்ற தலைவர் அபர்ணா ரவிசங்கர் உள்ளனர்.